–தினத்தந்தி, ஒவ்வொரு அங்குலமும் தங்க நகை போல அலங்கரிக்கப்படுகிறது–

தினத்தந்தி
DAILY THANTHI

மதுரை (18–7–2024)
வியாழக்கிழமை
MADURAI

மலர் 82
இதழ் 259
VOL 82
ISSUE 259

வெல்க தமிழ்

குரோதி ௵ ஆடி மீ 2 உ
ஹிஜிரி 1446 முகரம் 11

# விபத்தில் இறந்த தனியார் நிறுவன ஊழியரின் குடும்பத்துக்கு இ.எஸ்.ஐ. சார்பில் உதவித்தொகை

மதுரை,ஜூலை.18–

மதுரை விளாச்சேரியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தவர் சரவணன்(வயது 37). இவர் கடந்த 2023–ம் ஆண்டு டிசம்பர் 22–ந்தேதி ஒரு சாலை விபத்தில் இறந்தார். எனவே இவர் பணியாற்றிய நிறுவனம் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் சரவணன் பெயரில் சந்தா தொகையை செலுத்தி வந்தது. இதையடுத்து இ.எஸ்.ஐ. சார்பில் சரவணன் குடும்பத்துக்கு உதவித் தொகை வழங்க மதுரை துணை மண்டல அலுவலகத்தில் ஆணை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் இ.எஸ்.ஐ. அலுவலகம் இணை இயக்குனர்(பொறுப்பு) மீனாட்சி சுந்தரம், துணை இயக்குனர் விஜயன் மற்றும் தனியார் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு துறை அதிகாரி தங்கபாண்டி மற்றும் மார்க்கெட்டிங் மேனேஜர் முருகப்பன் ஆகியோர் சரவணன் குடும்பத்துக்கு ரூ.1,01,476 நிலுவைத்தொகையாக வழங்கப்பட்டது. மேலும் மாதந்தோறும் ரூ.16,023 பென்ஷன் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவலை திருநகர் கிளை தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் தெரிவித்து உள்ளது.